# 7

# இயேசுவானவர் எப்படி மரித்தார்?

இயல்பாகவே, இயேசுவின் மரணம், அவரைப் பற்றிய வேதாகம செய்திக்கு மையமாக இருக்கிறது. அவர் வாழ்ந்தார் என்பதற்கு, இது மிகவும் உறுதிப்படுத்தப்பட்ட வரலாற்று உண்மைகளில் ஒன்றாக இருக்கிறது. நாம் முன்னதாக பார்த்தபடி, யூத அதிகாரிகளின் தூண்டுதலின்படி அவர் பொந்தியு பிலாத்துவின் கைகளில் சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். அவருடைய மரணத்தைப் பற்றி வேறு என்ன நாம் தெரிந்து கொள்ள முடியும்? சிலுவையில் அறையப்படுதல் என்றால் உண்மையில் அதின் அர்த்தம் என்ன? இந்த வரலாற்று கேள்விகளுக்கு பதில் அளிக்கும் முயற்சியில், நாம் வேதாகமத்திலிருந்தும் மற்றும் வேதாகமம் அல்லாத மூலங்களில் இருந்தும் உதவி பெருகிறோம்.

## பயங்கரம் மற்றும் வலி

மெல் கிப்ஸன் என்பவருடைய 2004ஆம் ஆண்டின் *கிறிஸ்துவின் பாடுகள்* என்ற படம் சிலுவையில் அறையப்படுதலின் மிருகத்தனம் மற்றும் மனிதத்தன்மை யற்ற நிலையை தெளிவாக சித்தரித்தது. சில பார்வையாளர்கள் படத்தில் காண்பிக்கப்பட்ட வன்முறை பற்றி புகார் செய்தார்கள். பல ஆண்டுகளாக சிலுவையில் அறையப்படுதலை படித்தவன் என்ற முறையில், எனது பதிலளிப்பு, “நீங்கள் என்ன எதிர்பார்த்தீர்கள்?” என்பதாக இருக்கிறது. இயேசு எவ்விதம் மரித்தார் என்பதை எவ்வளவு குறைவாக நாம் புரிந்து கொள்கிறோம் என்பதை இது காண்பிக்கிறது என நான் யூகிக்கிறேன்.

சிலுவையில் அறையப்படுதல் என்பது ரோமர்களால் கண்டுபிடிக்கப்படாத, ஆனால் “முழுமைபடுத்தப்பட்ட” ஒரு விதமான சித்திரவதை மற்றும் மரண தண்டனையாக இருந்தது (ஒருவர் இப்படிப்பட்ட ஒரு குரூரமான செயலுக்கு இந்த வார்த்தையை பயன்படுத்தக் கூடுமானால்). இது ஆரம்பத்தில், கொல்லப்பட்ட எதிரிகளின் உடல்களை கூர்மையான கழுமரங்கள் அல்லது மரங்களில், மிருகங்கள் காணும்படியாக வைப்பது, வெற்றியை காண்பிப்பது மற்றும் வெற்றி கொள்ளப்பட்டவர்களை அவமானப்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. பின்னர், யாரோ ஒருவன் மக்கள் உயிரோடு இருக்கும் போதே அவர்களை கழுமரத்தில் ஏற்றுவது என்ற கருத்தை கொண்டிருந்தான். ரோமர்கள் இந்த பயங்கரமான தண்டனை முறையை எடுத்துக் கொண்டு, அதை ஆணிகள் அடிப்பது அல்லது கைதிகளை மரங்களில் அல்லது சிலுவைகளில் கட்டுவது, இவ்விதமாக அவர்கள் தாமதமாக மற்றும் மிகுந்த வேதனையோடு மரிக்கும்படி செய்வது என அதை “மேம்படுத்தினார்கள்.” (“வலி”யை மிகவும் சரியாக விளக்குவதற்கான ஆங்கில வார்த்தைகளில் ஒன்றாக “மிகுந்த வலி” என்ற வார்த்தை உள்ளது, இது “சிலுவையிலிருந்து” என்று பொருள்படும் என்ற

*வார்த்தையிலிருந்து வரப்பெற்றுள்ளது.)*

*சிலுவையில் அறையப்படுவதால் ஏற்படும் மரணம் பொதுவாக அதிர்ச்சி, இரண்டாம் நிலை நோய் தொற்று, வெளிப்படையான அவமானம், பலம் இழத்தல் அல்லது மூச்சு திணறலில் முடிந்தது. சிலுவையில் அறையப்படுதலில் எதுவுமே உடனடி மரணத்தை உண்டாக்காது. குற்றவாளி சிலுவையில் கட்டப்பட்டிருந்தால், அங்கே காயங்களே ஏற்பட்டிருக்காது. சில நேரங்களில் (ஆனால் எப்போதும் அல்ல) சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு அடிக்கப்படுவதால் காயங்கள் ஏற்படும். கைகள் மரச்சட்டத்தில் வைத்து ஆணிகள் அடிக்கப்பட்ட போதிலும், அது ஒவ்வொரு மணிக்கட்டு எலும்புகள் நடுவிலும் கவனமாக ஆணி (உண்மையில் மெல்லிய ஆணி) உட்செலுத்தப்பட்டது. இது குற்றவாளி சிலுவையில் தொங்குகையில், தன் எடையை தூக்குவதற்கான எலும்பு வடிவ உதவியை உடையதாக இருந்தது (ஆணிகள் அடிக்கப்பட்ட உள்ளங்கைகள் இந்த எடையை தூக்கியிருக்க முடியாது). மேலும், இது பெரிய இரத்த நாளங்கள் வெடித்து, இரத்த கசிவு ஏற்படுவதால், ஏற்படும் விரைவான மரணத்தை தவிர்த்தது. குற்றவாளி தாமாக மரிப்பதற்கு அனுமதிக்கப்படுவார், இந்த முறை சில நாட்கள் வரை நீடித்தது.*

*இயேசுவானவரின் காரியத்தில், எப்படியிருந்தாலும் மரணம் மிக விரைவாக வந்தது (தோராயமாக ஆறு மணி நேரங்களில், சுவிசேஷங்களின்படி). இது யோவான் 19:34ல் யோவான் கூறுகிறபடி, இயேசுவானவர் அநேகமாக இருதய வெடிப்பினால் மரித்தார் என்ற கருத்தை முன்வைக்கிறது. "ஆகிலும் போர்ச்சேவர்களில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்;உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது." பல மருத்துவ நிபுணர்கள் "இரத்தம் மற்றும் தண்ணீர்" என்பது இயேசுவின் மரணத்தை தொடர்ந்து, அவருடைய இரத்தத்தின் சீரம் மற்றும் கெட்டி பகுதிகள் பிரிந்ததால் ஏற்பட்டது என்பதை ஒப்புக் கொள்கிறார்கள். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு சவுக்கால் அடிக்கப்பட்டிருந்ததால், சந்தேகத்திற்கு இடமின்றி அவருடைய மரணம் விரைவுபடுத்தப்பட்டது. சவுக்கால் அடிக்கப்படுதல் என்பது தன்னில் தானே பயங்கரமானதாக இருந்தது. பயன்படுத்தப்பட்ட சவுக்கு, எலும்பு துண்டுகள், உலோகம் அல்லது கண்ணாடிகள் சொருகப்பட்ட பல தோல் வார்களைக் கொண்டதாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அடிபட்ட போது, இது உடலின் தசையை பிய்த்துக் கொண்டு வந்தது. கடினமான சவுக்கு அடியினால், குற்றவாளியின் உள் உறுப்புகள் முதுகு பகுதியில் காணப்பட்டன என சில பண்டைய எழுத்தாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். சில நேரங்களில் சவுக்கால் அடிப்பதே மரணத்தை ஏற்படுத்துவதாக இருந்தது.*

*இயேசுவானவரோடு சிலுவையில் அறையப்பட்ட கள்வர்களின் காரியத்தில், மூச்சு திணறலால் மரணம் சம்பவித்தது. மக்கள் வழக்கமாக, கால்கள் மடக்கப்பட்டவர்களாக, பாதங்கள் ஆணி அடிக்கப்பட்டதாக அல்லது மரச்சட்டத்தில் கட்டப்பட்டதாக சிலுவையில் அறையப்பட்டார்கள். இது குற்றவாளி தனது வயிற்று பகுதிக்கு காற்றை எடுத்துச் செல்லும்படி, கீழ் நோக்கி தள்ளுவதற்கு அனுமதித்தது. பல மணி நேரங்கள் கைகள் விரித்து ஆணியடிக்கப்பட்ட நிலையில், சுவாசிப்பதற்கு இது ஒன்று தான் வழியாக இருந்தது. ஆணி அடிக்கப்பட்ட கால்களில் கீழ்நோக்கி அளுத்தி தள்ளுவது*

என்பது மிகவும் வேதனையுள்ளதாக இருந்தது. யோவான் 19:31-33, யூத அதிகாரிகள் பிலாத்துவுடம் சிலுவையில் அறையப்பட்ட மூவரின் கால்களையும், அவர்களுடைய மரணத்தை விரைவு படுத்தப்படும்படியாகவும் மற்றும் பஸ்கா ஓய்வு நாளில் அவர்கள் உடல்கள் சிலுவையில் இராதபடி, அப்புறப்படுத்தும் படியாகவும், அவர்களுடைய கால்களை முறிக்கும்படியாக கேட்டுக் கொண்டார்கள். கால்களை முறிப்பது என்பது குற்றவாளி இனிமேலும் கால்களை மடக்கி சுவாசிக்க முடியாதபடி செய்தது, அதனால் மரணம் சில நிமிடங்களிலேயே நேரிட்டது. இயேசுவின் கால்களும் முறிக்கப்பட்டிருக்கக் கூடும். ஆனால் அவர் ஏற்கனவே மரித்துப் போயிருந்ததை போர்ச்சேவர்கள் கவனித்துவிட்டார்கள். அவர்களில் ஒருவன் அதை உறுதி செய்வதற்கு அவருடைய விலாவில் ஈட்டியால் குத்தினான்.

## நிந்தை மற்றும் அவமானம்

சிலுவையில் அறையப்படுதல் என்பது அதிகமான சரீர வலியை மட்டும் அல்ல, நிந்தை மற்றும் அவமானத்தையும் உள்ளடக்கியிருந்தது. குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றுவதிலும் எப்படி ஒரு பிரச்சார மதிப்பை பெறுவது என்பதை ரோமர்கள் அறிந்திருந்தார்கள், ஆகவே சிலுவையில் அறையப்படுதல் என்பது எப்போதும் - உதாரணமாக, நகரங்களுக்குள் மற்றும் நகரங்களுக்கு வெளியே செல்லும் அதிக பிரயாணங்கள் மேற்கொள்ளப்படும் சாலைகளின் அருகில் பொது இடங்களில் நிகழ்த்தப்பட்டன. பல இடங்கள் ஆலோசனையாகச் சொல்லப்பட்டாலும், இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்ட சரியான இடம் நமக்கு தெரிவதில்லை.

ஒருவர் எந்த குற்றத்திற்காக மரணதண்டனை அடைகிறாரோ, அந்த குற்றம் ஒரு பலகையில் எழுதப்பட்டு அவ்வழியே செல்கிறவர்கள் இது எதனால் ஏற்பட்டது என்பதை அறியும்படியும், அவர்கள் தாங்களே அந்தக் குற்றங்களை செய்யாதிருக்கும்படியும், தண்டிக்கப்பட்டவரின் தலையின் மேல் வைக்கப்படும். மூன்று சுவிசேஷப் புத்தகங்களும். “இயேசு யூதருடைய ராஜா” என்ற மேல் விலாசம் இயேசுவின் தலைக்கு மேலாக வைக்கப்பட்டிருப்பதை குறிப்பிடுகின்றன. யோவான் 19:19-22 வசனங்கள்; இவைகள் எபிரெயு (அநேகமாக, பாலஸ்தீனத்தின் வட்டார மொழியாகிய அரமாயிக் மொழி), லத்தீன் (ரோம பேரரசின் ஆட்சி மொழி) மற்றும் கிரேக்கு (மத்திய தரைகடல் பகுதியில் பொதுவான பயன்பாட்டில் இருந்த மொழி) ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தது என கூடுதல் தகவல் தருகின்றன. இந்த மேல் விலாசம் எப்போதுமே இந்த மூன்று மொழிகளில் எழுதப்பட்டிருந்ததா என்பது நமக்கு தெரிவதில்லை. எல்லாராலும் இது வாசிக்கக் கூடியதாக இது இருக்க வேண்டும் என்பதை பிலாத்து உறுதி செய்து கொண்டார். யூதருடைய ஆட்சேபனை மற்றும் பிலாத்துவிடம் எழுதப்பட்டிருப்பதை மாற்றி, “தான் யூதருடைய ராஜா” என்று *கூறியதாக* எழுதும்படி முயற்சித்ததையும் யோவான் பதிவு செய்துள்ளார். பிலாத்து, தன்னை மரணதண்டனை கொடுக்கும்படி வற்புறுத்தி உத்தரவு கொடுக்கும்படி செய்த, தன் இகழ்ச்சியான யூத குடிமக்களின் செயலை மன்னியாத நிலையில், இதை அவர்களை பழிவாங்குவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பார்த்தார். அவன் அவர்களை பார்த்து, “நான் எழுதினது எழுதினதே” என்றான் (யோவான் 19:22) சுவிசேஷ எழுத்தாளர்கள், “அவர்

யூதருடைய ராஜா" என்பதை இயேசுவைப் பற்றிய சத்தியத்தின் அறிக்கையாக அந்த மேல் விலாசத்தை பார்த்தார்கள்.

சிலுவையில் அறையப்படுதல் என்பது மரிப்பதற்கு மிகவும் அவமானமான ஒரு வழியாக இருந்தபடியினால், இது மிகவும் மோசமான குற்றவாளிகளுக்காக வைக்கப்பட்டிருந்தது மற்றும் இது சாதாரணமாக ரோமக் குடிமக்களுக்கு எதிராக பயன்படுத்தப்படவில்லை (வரலாறு சில விதிவிலக்குகளை பதிவு செய்திருந்தாலும்). இது ரோமக் குடிமகனாயிருந்த பவுல், சிலுவையில் அறையப்படுவதற்கு பதிலாக, ஏன் சிரச்சேதம் செய்யப்பட்டார் என்பதை விளக்குகிறது![1] பேதுரு, இதற்கு மாறாக, ஒரு சாதாரண கலிலேய விவசாயியாக, இருந்ததால் சிலுவையில் அறையப்பட்டார் (பேதுரு மரிக்கும் விதத்தை குறித்த அளவு புலப்படாத குறிப்பை யோவான் 21:18, 19ல் பாருங்கள்). சிலுவையில் அறையப்படுவதிலுள்ள அவமான நிலையை இயேசுவானவர் சிலுவைக்கு முன்னரும் மற்றும் சிலுவையில் இருந்த போதும் அடைந்த பரிகாசத்தை புரிந்து கொள்ள உதவி செய்கிறது. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவர் சிறப்பாக தன்னை ராஜா என உரிமை கோரிய ஒருவர் எப்படி இந்த நிலையில் வைக்கப்பட முடிந்தது? (காணவும் மத்தேயு 27:27-44; மாற்கு 15:16-32; லூக்கா 23:32-38; பிலிப்பியர் 2:8; எபிரெயர் 12:2.)

சிலுவையில் அறையப்படுதலின் அவமானம் பவுலின் வார்த்தையில், முதன் முதலில் இயேசுவின் கதையைக் கேட்டவர்களுக்கு, "இடறலாயிருந்தார்"[2] என்பதாக இருந்தது (1 கொரிந்தியர் 1:23; கலாத்தியர் 5:11). "பழைய சிலுவை" மற்றும் "கிறிஸ்துவின் சிலுவையில் நான் மேன்மை பாராட்டுவேன்" என்ற பாடல்களை பாடுகிற நமக்கு இது விநோதமாக தெரியலாம், ஆனால் அது முழுமையாக புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஒரு அஞ்ஞானியின் கண்நோக்கில், யாரோ ஒருவர் சிலுவையில் அறையப்படுவதால், ஒரு "வெற்றி" அடையப்பட முடியும் அல்லது ஒரு வித நன்மை சாதிக்கப்பட முடியும் என்பது எந்த ஒரு அர்த்தத்தையும் ஏற்படுத்துவது இல்லை. ஒரு யூதருடைய கண்நோக்கில், சிலுவை என்பதே இயேசு யூதருடைய ராஜாவாயிருக்கக்கூடும் என்ற கருத்தை எடுத்துப்போட்டது. ஏனெனில், உபாகமம் 21:23 மரத்திலே தூக்கப்பட்ட ஒவ்வொருவர் மேலும் ஒரு சாபத்தை கூறுகிறது. (காணவும் யோசுவா 8:29, மரணத்திற்கு பின்னர் ஒருவர் மரத்தில் தூக்கிப்போடப்படுவது என்பது கடுந்தோல்வியையும் அவமானத்தையும் குறிப்பதாக உள்ளது.) தேவனுடைய மேசியா நிச்சயமாக சபிக்கப்பட்ட ஒருவராக இருக்க முடியாது! இது ஆரம்பகால சபைக்கு, அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட மற்றும் உயிர்த்தெழுந்த ஒரு மேசியாவை பிரசங்கித்தபடியால், ஒரு வகையான உபதேசரீதியான ஒரு பிரச்சனையை உருவாக்கியது. பவுல் இந்த பிரச்சனைக்கு, உபாகமம் 21இல் சாபத்தை மேற்கோள் காட்டிய நிலையில், கலாத்தியர் 3:13, 14 இல் தீர்வை காண்கிறார். அவர், "... கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு (அதாவது, அதை கைக்கொள்வதற்கான நம்முடைய இயலாமை; கலாத்தியர் 3:10-12) நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்" என்று விளக்கினார். பவுல் இயேசுவின் சபிக்கப்பட்ட சூழ்நிலையை மறுக்கவில்லை, ஆனால் இயேசு நமது "சாபத்தை" சிலுவை மரணத்திற்கு தம்மை ஒப்புவித்ததின் மூலம் தன் மேல் சுமந்து கொண்டார் என்பதை வலியுறுத்தினார்.

## முக்கியத்துவம் மற்றும் இடறல்

பவுலின் சிலுவைக்கான அழகான தற்காப்பு வாதம் 1 கொரிந்தியர் 1:18-25ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அங்கே அவர், ‘‘சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது” எனக் குறிப்பிட்டார். அவர் - யூதர்கள் “அடையாளங்கள்” கேட்டபோதிலும், (அதாவது, இயேசுவின் அடையாளத்திற்கான முழுமையான ஆதாரம்) கிரேக்கர்கள் “ஞானத்தை” தேடின போதிலும் (அநேகமாக அவர்களுக்கு அர்த்தமுடையதாயிருந்த ஒரு தத்துவ முறை) - தான் “சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை” தொடர்ந்து பிரசங்கித்து வந்ததாக குறிப்பிட்டார். சிலுவை அவிசுவாசிகளுக்கு அர்த்தத்தை கொடுக்காததாக இருந்த போதிலும், தேவன் அவரையும் அவருடைய அன்பையும் - சிலுவையின் பாதையை அறிவதற்கான ஒரு வழியை அதில் கொடுத்துள்ளார் என பவுல் தொடர்ந்து கூறினார். சிலுவை இப்போதும் பல மக்களுக்கு ஒரு இடறலாக உள்ளது, கி.பி. முதல் நூற்றாண்டில் இருந்தது போலவே. சுவிசேஷ செய்தி எந்த விதத்திலும் மனித பகுத்தறிவுக்கோ அல்லது பெருமைக்கோ அபயமிடுவதில்லை; நாம் பாவத்தின் நிஜநிலை மற்றும் அது நீக்கப்பட வேண்டியதின் அவசியத்தை பற்றி சிந்திக்க விரும்புவது இல்லை.

## முடிவுரை

இயேசு மரித்த விதத்தை பற்றி நமக்கு என்ன தெரியுமோ, அது ரோமருடைய சிலுவையில் அறையப்படுதல் மற்றும் பண்டைய யூதர்கள் மற்றும் கிரேக்கர்கள் அது பற்றி என்ன கருத்து கொண்டிருந்தார்களோ, அதோடு ஒத்துப்போகிறது. புதிய ஏற்பாட்டின் எந்த எழுத்தாளருமே இயேசுவின் வேதனையான சிலுவை மரணத்தின் விபரங்களை நமக்கு விபரமாக தர முன் வரவில்லை. அவருடைய மரணதண்டனை மிக சுருக்கமாக “… அவரை சிலுவையில் அறைந்தார்கள்” என்று விவரிக்கப்பட்டுள்ளது (மாற்கு 15:24; காணவும் மத்தேயு 27:35; லூக்கா 23:33; யோவான் 19:18). இது பழங்காலத்து பெரும்பாலான எழுத்தாளர்களின் எழுதும் விதத்திற்கு ஒத்துப்போகிறது, அவர்கள் சிலுவையில் அறையப்படுதல் விபரங்களை விபரமாக எழுதுவது இடறலாக/குற்றமாக அமைந்து விடும் என கருதியதால் சுருக்கமாக எழுதினார்கள். சுவிசேஷங்களின் ஆரம்பகால வாசகர்கள் சிலுவையில் அறையப்படுதல் என்பது எப்படிப்பட்டதாயிருந்தது என்பதை நன்கு அறிந்திருந்தார்கள், ஏனெனில், மரணதண்டனை என்பது பொதுமக்கள் பார்க்கும்படியாக வெளிப்படையாக நடந்தது. “சிலுவை” என்ற வார்த்தையை குறிப்பிடுவது அவர்களுக்கு, ஒரு ஆராதனை கூடத்தின் கட்டிடகலை உருவ விபரத்தையோ ஆபரணத்தின் உருவத்தையோ அவர்கள் மனதிற்கு கொண்டுவரவில்லை; அது சாதாரணமாக, தெளிவாக, ஒரு மரணதண்டனையின் கருவியாக இருந்தது. அவர்களுக்கு, அதில் யார் மரித்தார், எதற்காக மரித்தார் என்பது தான் மிகவும் முக்கியமானதாக இருந்தது.

குறிப்புகள்

[1]எசுபியஸ் *சபை வரலாறு* 2.25.5. [2]இந்த உருவகம். skandalon, என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வருகிறது, அது ஒரு கண்ணியை குறித்தது, பிறகு ஒரு குற்றத்திற்கான காரணத்தை குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. "Scandal" என்ற ஆங்கில வார்த்தை இந்த வார்த்தையிலிருந்து வருகிறது மற்றும் "சிலுவையைப் பற்றிய இடறல்" என்பது பவுல் 1 கொரிந்தியர் 1:23 மற்றும் கலாத்தியர் 5:11 இல் குறிப்பிட்டதை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது.